1992 மார்ச் 13]

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. முடிக்கொத்து நோய் மட்டு மல்ல. வாழைக்கு எந்த நோய் வந்தாலும் அத்தனை நோய் களையும் தடுத்து, களைய வேண்டுமென்ற உயரிய நோக் கத்தில்தான் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் வாழைக்கென தனியாக ஆராய்ச்சி மையத்தைத் தமிழகத்தில் நிறுவுவதற்கு விருப்பம் கொண்டுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 210, திரு. தா. வேடியப்பன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

210—

போளூர் வேளாண்மைப் பொறியியல் சேவை மையத்தை விரிவுபடுத்தல்

*6150 திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) போளூர் வேளாண்மைப் பொறியியல் சேவை மையத்தை விரிவுபடுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அந்த மையத்திற்கு சொந்தக் கட்டிடம் கட்டித்தந்து சரிவர இயங்கச் செய்ய அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): போளூர் வேளாண்மைப் பொறியி யல் சேவை மையம் ஆற்றுகின்ற பணியின் தன்மையின் அடிப்படையில் விரிவுபடுத்துவதற்கான வாய்ப்பும் இருக் கிறது.

திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறியதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இத்துடன் போளூர் என்றாலே வேளாண்மை என்று பொருள் உண்டு. போளூரில் பத்தாண்டுகளுக்கு முன்பு வேளாண்மைப் பொறியியல் சேவை மூலம் டிராக்டர் வைத்து அனைத்து விவசாய மக்களும் பய னடைந்தார்கள். அதை நவீனப்படுத்தும் திட்டத்தில் மேலும்

இரண்டு மூன்று டிராக்டர்களை வாங்கிக் கொடுத்து அந்த விவசாயப் பகுதி மக்கள் பயனடைய அரசின் செயற் குறிப்பு உள்ளதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போளூர் மட்டுமல்ல. தமிழகத்தின் வேளாண்மைப் பெருங்குடி மக்கள் நலன் பெறு கிற வகையில் இந்த அரசு அனைத்து திட்டங்களையும் செயல் படுத்திக்கொண்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 211, திரு. வே. பெரியசாமி மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப் புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

211—

அந்தியூரில் வீட்டுவசதி வாரிய வீடுகள்.

*809. திரு. வே. பெரியசாமி :

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பரா :

(அ) பெரியார் மாவட்டம் அந்தியூர் தொகுதியில், அந்தியூர் பேரூராட்சியில் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வீடுகட்ட முன்பணம் மக்களிடமிருந்து வசூல் செய்தபிறகும் வீடுகள் கட்டப்படாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இத்திட்டத்திற்குத் தேவையான குறைந்த அளவு விண்ணப்பங்கள் கூட பெறப்படாததாலும், பொரு ளாதார அடிப்படையில், செயலாக்க இயலாமையாலும், திட்டம் கைவிடப்பட்டது.

முற்பகல் 10-10

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டத்தில் அந்தியூர் தொகுதியில் உள்ள அந்தியூர் நகரப் பேரூராட்சி மன்றம் 20 ஆயிரம் மக்களை உள்ளடக்கிய பகுதியாகும். இங்கே ஏராளமான அரசு அலுவலகங்கள் இருக்கின்றன. ஏராளமான நெச